DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C. No.21/2025**
**P.W.7**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பனாவத் அரவிந்த் |
| Father's Name | : | திரு.B.N.நாயக் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 28 |

(Accused 1 and 2 are present).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 2nd day of June 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவெறும்பூர் சரக காவல் உதவி கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2024ம் வருடம் திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் சரக காவல் உதவி கண்காணிப்பாளராக பணியில் இருந்தபோது கடந்த 13.09.2024ம் தேதி துவாக்குடி காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு.ஈஸ்வரன் அவர்கள் நிலையப் பொறுப்பில் இருந்தபோது திருச்சி மாவட்டம், இலால்குடி, நெய்குப்பை கிராமம், காமராஜ் காலனி, மாரியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த சண்முகத்தின் மகன் சந்துரு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப காவல் நிலையக் குற்ற எண்.204/2024, பிரிவுகள் 119(2), 296(b), 115(2), 133, 351(2) of BNS r/w.3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST(POA) Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த புகார் மனு **அ.த.சா.ஆ.2** ஆகும். அந்த முதல் தகவல் அறிக்கை

**அ.த.சா.ஆ.3** ஆகும். பின்பு முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இணைத்து இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வழக்கு பட்டியல் இனத்தவர் மீதான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்கு என்பதால் புலன்விசாரணை அதிகாரியை நியமிக்கவேண்டி திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு முதல் தகவல் அறிக்கையின் நகலுடன் வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார்.

மேற்படி வழக்கை திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண் C.No.38/SJ&HR/PROCEEDINGS/TRI/2024, நாள் 13.09.2024ன் படி காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ஜாபர் சித்திக் அவர்கள் தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அந்த செயல்முறை ஆணை **அ.த.சா.ஆ.4** ஆகும்.

மேற்படி காவல் துணை கண்காணிப்பாளர் திரு.ஜாபர் சித்திக் அவர்கள் இந்த வழக்கை தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வடிவேல் மற்றும் செபாஸ்டின் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.5** ஆகும். மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.6** ஆகும்.

பின்பு நிகழ்நிலை புகார்தாரர் சந்துரு மற்றும் சாட்சிகள் அருண், நந்தகுமார், புஷ்பராஜ் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் வடிவேல், செபாஸ்டின் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

WWeb Copy

பின்பு இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரருக்கு சாதிச் சான்று மெய்த் தன்மை சான்று கேட்டு இலால்குடி வட்டாட்சியரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். இலால்குடி வட்டாட்சியர் திரு.முருகன் அவர்கள் வருவாய் ஆய்வாளரின் விசாரணை மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் நிகழ்நிலை புகார்தாரர் சந்துரு இந்து, தேவேந்திரகுல வேளாளர் எனப்படும் பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர் என்று சாதிச் சான்று மெய்த்தன்மை சான்று வழங்கியுள்ளார். அந்த சாதிச் சான்று மெய்த் தன்மைச் சான்று **அ.த.சா.ஆ.7** ஆகும். பின்பு சாதிச் சான்று மெய்த் தன்மை சான்று வழங்கிய வட்டாட்சியர் திரு.முருகன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு.ஜாபர் சித்திக் அவர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டதால் மேற்படி வழக்கை திருச்சிராப்பள்ளி மாநகர காவல் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் C.No.63/FUR.PROCEEDINGS/SJ&HR/TRI/2024, நாள் 02.12.2024;ன் படி எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அந்த செயல்முறை ஆணை **அ.த.சா.ஆ.8** ஆகும்.

மேற்படி வழக்கை எனது தொடர்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தைப் பார்வையிட்ட போது ஏற்கனவே புலன்விசாரணை செய்த அதிகாரி தயார் செய்து வைத்திருந்த மாதிரி வரைபடம், பார்வை மகஜரை ஒத்து இருந்ததால் நான் தனியாக தயார் செய்யவில்லை.

நிகழ்நிலை புகார்தாரர் சந்துரு, சாட்சிகள் அருண், நந்தகுமார், புஷ்பராஜ் ஆகியோர்களை விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு

செய்தேன். பின்பு சாட்சிகள் பாரதி, பாலகிருஷ்ணன், சம்பத் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

சாட்சிகளின் விசாரணையின் அடிப்படையில் சம்பவம் உண்மை என தெரிந்து எதிரிகளை தேடியபோது கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கடந்த 23.01.2025ம் தேதி மாலை 4.00 மணிக்கு துவாக்குடி எலக்ட்ரானிக் பஸ் ஸ்டாப் அருகே சென்று கொண்டிருந்தபோது அங்கு TN49BK0514 என்ற பதிவெண் கொண்ட Mahendra Scorpio காரில் வந்த எதிரிகள் இருவரையும் பிடித்து காரணம் கூறி கைது செய்து விசாரணை செய்தபோது 1வது எதிரி பாலமுருகன் தானாக முன்வந்து எவ்வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும் இல்லாமல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஆச்சியப்பராஜா மற்றும் நாகராஜ் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 1வது எதிரி பாலமுருகன் தன்னை அழைத்துச் சென்றால் சம்பவம் நடந்த கம்பெனியை அடையாளம் காட்டி தங்களிடம் இருந்த TN49BK0514 என்ற Mahendra Scorpio வண்டியை தங்களிடம் ஆஜர் செய்வதாகக் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.9** ஆகும்.

முதல் எதிரி பாலமுருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 23.01.2025 மாலை 17.50 மணிக்கு துவாக்குடி எலக்ட்ரானிக் பஸ் ஸ்டாப் அருகே TN49 BK 0514 என்ற Mahendra Scorpio காரை சாட்சிகள் ஆச்சியப்பராஜா மற்றும் நாகராஜ் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.10** ஆகும். படிவம் 91 **அ.த.சா.ஆ.11** ஆகும். பின்பு எதிரிகளை நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை முடித்து தக்க வழிகாவல்

மூலம் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்குச் சொத்தான TN49 BK 0514 என்ற Mahendra Scorpio காரின் புகைப்படங்கள் **அ.த.சா.ஆ.12** ஆகும்.

இவ்வழக்கில் காயம்பட்ட நிகழ்நிலை புகார்தாரர் சந்துருவிற்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு பதிவு செய்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று காயச்சான்று வழங்கிய துவாக்குடி அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.மஞ்சுளா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று **அ.த.சா.ஆ.13** ஆகும்.

இவ்வழக்கில் காயம்பட்ட நிகழ்நிலை புகார்தாரர் சந்துருவிற்கு மேல் சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு பதிவு செய்து அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று காயச்சான்று வழங்கிய அண்ணல் மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.முத்தமிழ்செல்வன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று **அ.த.சா.ஆ.14** ஆகும்.

பின்பு இவ்வழக்கின் 1வது எதிரி பாலமுருகனுக்கு சாதிச் சான்று மெய்த் தன்மை சான்று கேட்டு திருப்பத்தூர் வட்டாட்சியரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். திருப்பத்தூர் வட்டாட்சியர் திரு.மாணிக்கவாசகம் அவர்கள் வருவாய் ஆய்வாளரின் விசாரணை மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் 1வது எதிரி பாலமுருகன் இந்து கள்ளர் எனப்படும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்று சாதிச் சான்று மெய்தன்மைச் சான்று வழங்கினார். அந்த சாதி சான்று மெய்த் தன்மை சான்று **அ.த.சா.ஆ.15** ஆகும். பின்பு சான்று வழங்கிய

Vega

வட்டாட்சியர் திரு.மாணிக்கவாசகம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு இவ்வழக்கின் 2வது எதிரி வெங்கடேஷ் விஜய் என்பவருக்கு சாதிச் சான்று மெய்த் தன்மை சான்று கேட்டு திண்டுக்கல் கிழக்கு வட்டாட்சியரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். திண்டுக்கல் கிழக்கு வட்டாட்சியர் திருமதி.மீனாதேவி அவர்கள் வருவாய் ஆய்வாளரின் விசாரணை மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் 2வது எதிரி வெங்கடேஷ் இந்து பிரமலைக்கள்ளர் எனப்படும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்று சாதிச் சான்று மெய்தன்மைச் சான்று வழங்கினார். அந்த சாதிச் சான்று மெய்த் தன்மை சான்று **அ.த.சா.ஆ.16** ஆகும். பின்பு சான்று வழங்கிய வட்டாட்சியர் திருமதி.மீனாதேவி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு இவ்வழக்கின் உண்மை தன்மை அறியும் பொருட்டு சாட்சிகள் அருண் மற்றும் நந்தகுமார் ஆகியோர்களை பிரிவு 183(6)(a) BNSS–ன் படி இரகசிய வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கை பெற திருச்சிராப்பள்ளி குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.6 அவர்களுக்கு உதவி ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து சாட்சிகள் அருண் மற்றும் நந்தகுமார் ஆகியோரின் இரகசிய வாக்குமூலத்தைப் பதிவு செய்து அறிக்கை பெற்றேன். சாட்சிகள் அருண் மற்றும் நந்தகுமார் ஆகியோர்கள் பிரிவு 183(6)(a) BNSS–ன் படி அளித்த வாக்குமூலங்கள் முறையே **அ.த.சா.ஆ.17 மற்றும் அ.த.சா.ஆ.18** ஆகும்.

பின்பு இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் ஆய்வாளர் திரு.ஈஸ்வரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

Advocate

எனது புலன்விசாரணையில் இவ்வழக்கின் எதிரிகள் நிகழ்நிலை புகார்தாரர் சந்துருவை சாதி பெயரைச் சொல்லி திட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்துள்ளது தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 119(2), 296(b), 115(2), 133, 351(2) of BNS r/w.3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST(POA) Act–லிருந்து பிரிவுகள் 119(1), 296(b), 115(2), 133, 351(2) of BNS r/w.3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST(POA) Act ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.19** ஆகும்.

பின்பு வழக்கின் புலன்விசாரணையை முடித்து குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். என்னுடைய புலன்விசாரணையின்போது சாட்சிகள் சந்துரு, நந்தகுமார், பாரதி, பாலகிருஷ்ணன் ஆகியோர் சம்பவம் குறித்து சொன்னார்கள்.

**குறுக்கு விசாரணை(எதிரிகள் தரப்பில்)**

நிகழ்நிலை புகார்தாரர் சந்துரு 05.09.2024 அன்று மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார் என்றால் சரிதான். மருத்துவமனை தகவல் எதுவும் கிடைக்கவில்லை. நிகழ்நிலை புகார்தாரர் சந்துரு 05.09.2024 அன்று வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அது மறைக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார் மனு பின்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் புஷ்பராஜ் மற்றும் சம்பத் ஆகியோர்கள் சம்பவத்தை கேள்விப்பட்டதாக வாக்குமூலம் அளித்தார்கள். எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது

என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை–இல்லை.</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

Adopt cpa